கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கணக்கு, உரித்து மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் *நியமங்களுக்கு* இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை.

	குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.20 பந்திக்கு முரணாக ஓராண்டு காலப்பகுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய நீண்டகால கடன் அளவினை நடைமுறைப் பொறுப்பின் கீழ் வெளிப்படுத்தி இருக்கவில்லை.	சரியாக வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலான காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 15,915,344 ஆன ஊழியர் கடன் கொடுப்பனவு ரூபா 12,813,648 ஆன ஊழியர் கடன் சேகரிப்பு, ரூபா 27,641,931 ஆன வட்டி பெறுமதி மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,480,770 ஆன வட்டியை காசுப் பாய்ச்சல் கூற்றில் இணக்கம்	காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.

	செய்யாமல் இருந்ததுடன் ஆண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனையால் கிடைத்த ரூபா 9,937,000 மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 75,008,814 என காண்பிப்பதற்குப் பதிலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 138,601,608 பெறுவனவாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆண்டில் நிலையான வைப்புக்கள் முதலீடு ரூபா 50,000,000 இற்குப் பதிலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 70,965,606 பெறுவனவாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.30 பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியீட்ட செயற்பாடுகளின் கீழ் வரும் காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கிடைத்த மூலதனச் செலவின மானியம் ரூபா 34,498,559 இற்குப் பதிலாக ரூபா 83,855,995 என சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் நீண்ட காலக்கடன் மீளச் செலுத்தல் ரூபா 4,694,400 தொகை சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் வரும் காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் ரூபா 34,264,601 இற்குப் பதிலாக ரூபா 209,272,419 என சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்க வேண்டியவை தொகை ரூபா 117,076,278 இற்குப் பதிலாக ரூபா 267,931,399 தொகை சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.	காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.
(உ)	நியமத்தின் 9.5 பந்தியின் பிரகாரம் குறைந்து செல்லும் முறை பெறுமானத்தேய்வு (செலவினம்) இனங்காணப்பட்டிருந்த போதும் காலக்கழிவு (வருமானம்) எளிய முறையில் இனங்காணப் பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒழுங்கைகள் பாலங்கள் மற்றும் மதகுகளுக்குரிய பெறுமானத் தேய்வு கொள்கை ஏனைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களில் பெறுமானத்தேய்வு கொள்கைக்கு முரணாக இருந்தது. மேலும் ஒழுங்கைகள் பாலங்கள் மற்றும் மதகுகளுக்குரிய பின்பற்ற வேண்டிய பெறுமானத் தேய்வு கொள்கை நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	மீள் மதிப்பீட்டின் போது இனங் காணப்பட்ட பெறுமதி பெறுமானத் தேய்வு செய்யப்படாத உடன் அது தொடர்பாக நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருப்பதாக	பின்பற்றப்பட்ட கொள்கைகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும்
(ஆ)	முன்னைய ஆண்டில் காண்பிக்கப்பட்ட அட்டுறு அடிப்படைக்கு கணக்கீடு செய்யப்பட்ட முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் விலாய் ஆண்டில் காசு அடிப்படையில் கணக்கு வைத்தமையால் 02 கணக்கீட்டு கொள்கைகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது	ஆண்டின் போது கிடைத்த பணம் மாத்திரம் ஆண்டின் செலவினமாக இனம் காணப்பட்டது	கணக்கீட்டு கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டால் அது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதி கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டினன் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 22,936,235 ஆக இருந்த போதும் அது ரூபா 23,151,875 காண்பிக்கப்பட்டதால் ரூபா 215,640 ஆல் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டின் விரிவான வருமான கூற்றில் பரிமாற்ற கொடுக்கல் வாங்கலான வருமானத்தின் கீழ் செயற்திட்ட வருமானமான ரூபா 251,896 தொகை வட்டி வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	கணக்குகள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும்
(இ)	விரிவான வருமான கூற்றில் ஏனைய விரிவான வருமானங்களின் கீழ் மூலதன செலவின மானியங்களில் இருந்து	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்

	மிகை அல்லது பற்றாக்குறை இனங் காணப்பட்டு மூலதனச் செலவினம் கழிக்கப்பட்டு விரிவான வருமானமாக ரூபா 71,264,235 தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 167,842,105 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	தொலைபேசி இணைப்பை வடிவமைத்தல் மற்றும் வலையமைப்பு மேற்கொள் வதற்காக செலவிடப்பட்ட ரூபா 882,000 ஆன செலவினம் மூலதனம் ஆக்கப்படுவதற்கு பதிலாக ஆண்டின் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(உ)	2023 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 2,800,000 பெறுமதியான ஜீப் வண்டி 2024 ஆம் ஆண்டு மானியம் ஒன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது அந்த ஜீப் வண்டிக்காக 2024 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாத இருந்ததுடன் வருமானத்திற்கு ரூபா 112,000 இனங்காணப்பட்டு இருந்தது 2024 ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,398,950 ஆன செலவினம் மூலதனமாகப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஊ)	சல்மல் உயன முன்பள்ளி பாடசாலைக்கு புதிய கட்டிடம் ஒன்றிற்குரிய ரூபா 429,346 ஆன வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் 2024 ஆம் ஆண்டில் இறுதியில் நடைமுறை வேலையாக வேலை கணக்கிலிருந்து ரூபா 3,870,109 தொகை கட்டிட கணக்கிற்கு மாற்றப்பட்டு இருந்தது.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(எ)	இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்த சுடலைசாலையில் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 596,002 இற்கு பதிலாக ரூபா 8,142,531 நடைமுறை வேலையாக வேலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் நடைமுறை வேலை கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர்	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

கணக்கின் மீதி ரூபா 7,546,528 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.		

(ஏ)	2024 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா 718,605 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் சுற்றாடல் அனுமதிபத்திர நிலுவை மீதியிலிருந்து ரூபா 49,750 தொகை எவ்வித அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டு இருந்தது	2024 ஜுன் 18 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக மற்றும் முகாமைத்துவ குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது	உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன. .

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 மற்றும் 128 ஆம் பிரிவுகள் மற்றும் மயான பூமிகள் மற்றும் புதை குழிகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு	சபை எல்லைக்குள் அமைந்துள்ள 05 மயானங்களின் எல்லைகளை நிர்ணயித்து, அவற்றை சபைக்கு கையேற்று வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது 05 மயானங்கள் நில அளவைத் திணைக்களத்தின் மூலம் உல்லைகள் நிர்ணயம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பப்பட்டுள்ளதாக	கையேற்கும் செயன்முறையை விரைவுபடுத்த வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 85,936,778 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,425,256 ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் நடைமுறை கணக்கு ஒன்றில் ரூபா 148,125,670 தொகை காணப்பட்டதுடன் இதனை தற்காலிக முதலீடொன்றில் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	2025 பெப்ரவரி 06 ஆம் திகதி Money Market கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக	ஏற்றுக்கொள்ளப் பட்ட முதலீடுகளில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2..1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா	'000 ரூபா
(i)	வீதவரியும் வரியும்	73,537	54,805	58,132	53,330	68,757	48,736	49,212	60,684
(ii)	வாடகை	52,006	13,232	18,307	33,355	11,889	11,530	12,243	34,948
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	1,920	245	1,797	144	1,450	600	1,149	-
(iv)	ஏனைய வருமானம்	134,096	-	141,011	-	8,511	3,567	3,567	-
	மொத்தம்	**261,559**	**68,282**	**219,247**	**86,829**	**90,607**	**64,433**	**66,171**	**95,632**

2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீரவரி மற்றும் வரி வருமானம் ரூபா 53,329,966 ஆக இருந்தது.	அரசின் 15 ஆதனங்களுக்காக நிலுவை வீத வரி தொகை ரூபா 2,873,065 ஆக உள்ளதாக.	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	சபையின் 146 கடைகளிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,435,900 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.	2025 ஆம் ஆண்டில் இந்நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .

(இ)	முன்னைய ஆண்டுக்குரிய நிலுவை வீட்டு வாடகை ரூபா 14,492,098 ஆகவும் மீளாவாண்டுக்குரிய வாடகை ரூபா 2,814,456 தொகை மீளாய்வாண்டில் இறுதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிலுவைத் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

.3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் புதிய உறுப்பரைகளை நிறைவேற்றுவதற்காக செயற்பாடு ஒன்று உள்ளடக்கப்பட்டு இருந்தது எனினும் 2024 ஆம் ஆண்டு சபையால் எவ்வித உறுப்பரையொன்றும் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. .	21 வரைவு உறுப்புரைகளுடன் 2021 அக்டோபர் 14 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டதாக.	குறித்த நிறைவேற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும்
(ஆ)	பொதுமக்கள் முறைப்பாடுகள் அத்துமீறிய நிர்மாணம் மற்றும் அபாயகரமான மரங்கள் போன்ற ஒவ்வொரு வகையின் கீழ் 307 முறைப்பாடுகள் சபைக்கு கிடைத்திருந்த போதும் அதில் 146 முறைப்பாடுகள் ஆண்டு இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இன்னும் 146 தேர்வு செய்வதற்கு உள்ளதாக	முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் ரூபா 1,985,313 செலவிடப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணி ஒன்றைச் சுற்றி சபையால் ஆக்கபூர்மற்ற வகையில்	வாகனங்களை நிறுத்துவதற்காக சபைக்கு சொந்தமாக வேறு இடமும் ஒன்று இல்லாததால் திட்டம் மேற்கொள்ளப்படடதாக	அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

அபிவிருத்தி நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது..

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை யாக்கப்பட்டு இருக்கவில்லை..	நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை யாக்கப்பட்டு வருவதாக	சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக பேணப்பட வேண்டும்.

3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமான பரிசோதகர்கள் மற்றும் வேலை அத்தியட்சர்களின் முன்னோடி நிகழ்ச்சிதிட்டங்களுக்குரிய மாதத்துக்கு முன்னைய மாதத்தின் போது அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே பின்னர் நிகழ்ச்சிதிட்டங்களைத் தயாரிக்கும் போது விடுமுறை தினங்களில் கடமைகள் நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் நிகழ்ச்சிதிட்டங்களை பெற்றுக் கொள்ளும் போது கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப்படா விட்டால் விடுமுறை தினமாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	வெளிக்கள உத்தியோகத்தர்களின் கடமை முறைப்படுத்தி மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
25/2014 ஆம் இலக்க மற்றும் 29/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் 2024 ஜுலை 01 ஆந் திகதிய ஆட்சேர்ப்பின் பேரில் ஏற்பட்ட மிகை ஊழியர் எண்ணிக்கை 106 ஆக இருந்தது இது நியமனத்தை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்காமை மிகை ஊழியராக அவதானிக்கப்பட்டது	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்வுதற்காக நி.பி 71 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக.	அங்கீகரித்தல் மேற்கொள்ள வேண்டும். .

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டுக்காக சபையின் நிர்மாண கைத்தொழில், பொது வசதிகள் மற்றும் காணி மற்றும்	2025 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	அனைத்து பிரிவுகளையுளும் மேவுக்கை

கட்டிடங்கள் தொடர்பாக போதியளவு உள்ள கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		செய்யக்கூடிய வகையில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	30 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 34,978,053 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.	செலவினம் ஏற்படாமல் இருந்ததால் குறித்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக	நிதி ஏற்பாடு ஒதுக்கீடு மற்றும் அவற்றின் பயன்பாடு முறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	நடப்பாண்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 99,090,400 ஆக இருந்த போதும் அதில் ரூபா 15,370,318 தொகை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	ரூபா 83,720,081 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	நீராட்டுகள் சேமிப்பதற்கு காரணமாக இருந் பாதீடு கட்டுப்பாட்டு கருவியொன்றாயாக பயன்படுத்தப்பட வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மேல் மாகாணத்தில் 2008 இன் 01 ஆம் இலக்க திடக்கழிவு முகாமைத்துவ விதிகளின் 06 ஆம் அத்தியாயத்தின் 59 ஆம் பந்கியின் பிரகாரம் சபையினால் சேதனப் பசளை தொகுதி ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருந்த போதும் அது சபை பிரதேசத்தில் ஒட்டுமொத்த உக்கும் கழிவுகளில் இருந்து சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்காக போதியளவில் இல்லாமல் இருந்தது எனினும் சேதனப் பசளை தொகுதியை விரிவாக்குதல் அல்லது கழிவுகளை உபயோகப்படுத்தி உயிரியல் வாயு உற்பத்தி செய்தல் போன்ற மாற்று நடைமுறைகள் தொடரப்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை	உயிரியல் வாயு பிரிவொன்று நிறுவுதல் விளைவற்ற விடயமொன்றாகும் என்பதாக	கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தபபட வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய 2024 ஆம் ஆண்டு வரை செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் அவற்றின் செயன் முன்னேற்றம் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் செயன்முன்னேற்ற பரிசோதனையொன்று மேற்கொள்வதாக	நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக , செயன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப் வேண்டும்.